Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 02 விலை ரூபா 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM SPECIAL EDITION விஷேட பதிப்பு

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 27 (11 - 07 - 1991) வியாழக்கிழமை ஓசை: 143

## 13 வயதில் பட்டப்படிப்பை முடிக்கும் தமிழ் மாணவன்

(லண்டன்)

லண்டனில் கல்வி பயிலும் பதினொரு வயது தமிழ் மாணவன் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார். இவர் தனது 13 ஆவது வயதில் பட்டதாரிப் படிப்பை முடித்துக் கொள்ள விருக்கின்றார். கணேஷ் சிற்றம்பலம் என்ற பதினொரு வயது சிறுவனே இவ்வாறு சிறியவயதில் சாதனையடைபவராவார்., ஸரே பல்கலைக் கழகத்தில் (ம.ப.பா)

# ஆனையிறவு உல்லாச விடுதி

# 1 மணி நேரத்தில் புலிகள் வசம்

## பல ராணுவம் பலி; தப்பி ஓட்டம்

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாமின் ஒரு பகுதி நேற்றிரவு விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல ரக ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

ஆனையிறவு இராணுவ முகாமின் ஒரு பகுதியாக இருந்த ஆனையிறவு உப்பள இராணுவ முகாமின் ஒரு பகுதி நேற்றைய இரவுத் தாக்குதலில் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. உப்பள இராணுவ முகாமின் உல்லாசப் பயணிகள் விடுதியே முதலில் வீழ்ச்சியடைந்த இப்பகுதியாகும்.

நேற்று முன்தினம் அதிகாலை இராணுவ முகாம் மீது பீரங்கித் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள் நேற்றிரவு ஆனையிறவு உப்பளம் முகாமின் ஒரு பகுதியான உல்லாசப் பயணிகள் விடுதியை தாக்கினர். சுமார் ஒருமணி நேரம் மட்டுமே நீடித்த இத் தாக்குதலின் பின் உல்லாசப்பயணிகள் விடுதி புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது.

இத்தாக்குதலின் போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காய மடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு உப்பள முகாமின் பிரதான பகுதிக்கு ஓடிவிட்டனர்.

## போராளிகள் தரப்பிலும் சிலர் வீரமரணம்

(ஆனையிறவு)

ஆனையிறவு உப்பள உல்லாசப் பயணிகள் விடுதி முகாம் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பிலும் சில போராளிகள் வீரமரணமடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

## உல்லாச விடுதியில் ஆயுதங்கள் மீட்பு

(ஆனையிறவு)

உப்பளம் உல்லாசப்பயணிகள் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட ஆயுதங்களில் துப்பாக்கிகள், ரவைகள், கைக்குண்டுகள், எறிகணை என்பன உள்ளடங்குவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் முழுமையான எண்ணிக்கை விபரம் தெரியவரவில்லை.

## விமானப் படையினர் தொடர்ந்து தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாம் சூழவுள்ள பகுதியில் தொடர்ந்தும் சிறீலங்கா விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா விமானப்படை குண்டுவீச்சு விமானங்களும், வை - 12 வை - 08 அவ்ரோ பயணிகள் விமானங்களும் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்திய வண்ணம் உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் தாக்குதலில் ஈடுபட்டுள்ள உலங்கு வானூர்திகள் முகாம் சூழவுள்ள பகுதிகளிலும், தென்மராட்சியின் ஏனைய பகுதிகளிலும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கட்டுவன் பகுதிகளில் ஐம்பது கலிபர் தாக்குதல்

(கன்னாகம்)

ஏழாலை, கட்டுவன், தெல்லிப்பளைப் பகுதிகளில் இன்று அதிகாலை 3.00 மணியளவில் உலங்குவானூர்தித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பதினைந்துநிமிடம் தொடர்ச்சியாக ஐம்பது கலிபர் தாக்குதல் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது. சேதவிபரம் குறித்து அறிய முடியவில்லை. (60)

## சாவகச்சேரியில் ஹெலி எறிகணைத் தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று நள்ளிரவு உலங்கு வானூர்தித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

உலங்கு வானூர்தியில் இருந்து முப்பதுக்கு மேற்பட்ட எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சேத விபரங்கள் குறித்து இதுவரை அறிய முடியவில்லை. பொதுமக்கள் பதுங்கு குழிக்குள் பாதுகாப்பாக ஒதுங்கிக் கொண்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவம் தகவல்

## ஆனையிறவு மோதலில் 13 இராணுவம் பலி

(டில்லி)

ஆனையிறவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் இடம்பெறும் தாக்குதலில் நேற்று நான்கு சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரத்தை மேற்கோள் காட்டி இந்திய வானொலி தெரிவித்தது நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

## முஸ்லிம் பிரமுகர் குழு தமிழகம் பயணம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு முஸ்லிம்கள் குறித்து பேச்சு வார்த்தை நடத்த முஸ்லிம் பிரமுகர் குழு வொன்று தமிழகத்துக்குச் செல்லவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இந்த முஸ்லிம் பிரமுகர்கள் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து வடக்குக் கிழக்கு முஸ்லிம்கள் குறித்து பேசவுள்ளனர் என்றும் இவர்கள் தமிழகம் செல்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப் படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொழும்பில் பட்டப் பகலில் 2இலட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

கொழும்பு வடக்கு மருத்துவக் கல்லூரி ஊழியர்களின் சம்பளப்பண ரூபா 2,00,000 பட்டப் பகலில் வழி மறித்துக் கொள்ளையிடப்பட்டது. பணம் காரில் எடுத்துச்செல்லப்பட்டபோது ராகமைக்கு அருகில் வழிமறிக்கப் (மறு பக்கம் பார்க்க)

## வீதியில் நடமாட்டத்தைக் குறைக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் கண்டிவீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய பாதைகளில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களைக் கேட்டுள்ளனர். அவசர தேவைக்காக வேகமாக வரும் வாகனங்களின் வசதிக்காக மக்களை ஒத்துழைக்கும்படி இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

## 11 இளைஞர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 11 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இவர்களில் அக்கரைப்பற்று விடுதலைப்புலிகள் உறுப்பினர் இளங்கோவும் இதில் அடங்குவார் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஸ்லேவேனிய பா.மன்றம் சமாதான திட்டத்தை ஏற்றது

(லண்டன்)

யூகோஸ்லாவியாவில் இருந்து பிரிந்து சென்றுள்ள ஸ்லேவேனியாக் குடியரசின் பாராளுமன்றம், ஐரோப்பிய சமூகத்தின் மூன்று வெளியுறவு அமைச்சர்களும் புருணோத்தீவில் வகுத்த சமாதானத் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.

பாராமளுன்ற சிறப்புக் கூட்டத் தொடரில் காரசாரமான விவாதத்திற்குப்பிறகு இந்தச் சமாதான திட்டத்திற்கு ஆதரவாக 198 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (மறு பக்கம் பார்க்க)

## விபத்தில் சிறுவன் மரணம்

(அரியாலை)

யாழ்-கண்டி வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 13 வயதுச் சிறுவனொருவன் பலியானான். அரியாலையைச் சேர்ந்த ஆனந்தராசா காந்தரூபன் என்ற சிறுவனே கண்டி வீதியைக் கடக்க முயன்ற போது வாகனவிபத்தில் மரணமானான்.

# திருநாவுக்கரசு வெளியேற்றப்பட்டார்

(சென்னை)

வீட்டு வசதித் துறை அமைச்சராக எஸ் திருநாவுக்கரசு இருந்தபோது அடுக்குமாடிக் கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதில் முறைகேடு நடந்துள்ளதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுக் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

இந்தக் குற்றசாட்டுப் பற்றி விசாரணை நடத்தி ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை தரும்படி முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி 1989 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் சட்டப் பேரவையில் தெரிவித்ததை ஞாபகப்படுத்தி, ஆளும் கட்சி உறுப்பினர் சாந்தி ராஜன் இன்று சட்டப்பேரவையில் பேசினார். இதையடுத்து முதலமைச்சர் இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

சந்திரசேகரன் இது பற்றிப் பிரஸ்தாபித்தபோது அச்சமயம் அண்ணா புரட்சிக் கழக தமிழக முன்னேற்றக் கழக உறுப்பினரான எஸ் திருநாவுக்கரசு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் குறுக்கீடு செய்தார்.

திருநாவுக்கரசு தொடர்ந்து பேசிப் பேரவைத் தலைவரின் ஆணையை மீறியதற்காக சபையை விட்டு வெளியேறுமாறு பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா உத்தரவிட்டார். பின்னர் சபையை விட்டு வெளியேற்றப் பட்டார்.

ஒரு நாள் மட்டும் வெளியேற்றப் பட்ட தண்டனையுடன் சபையின் அடுத்த அலுவல் தொடங்கியது.

# இந்திய சிறிலங்கா வர்த்தகம் பரஸ்பர நல அடிப்படையில் பேச்சுவார்த்தை வேண்டும்

## -ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

இந்தியாவுக்கும், சிறிலங்காவிற்கும் இடையில் பரஸ்பர வர்த்தக ஊக்குவிப்பு நலன்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் என்று சிறிலங்காவின் கைத்தொழில் வர்த்தகத் துறை தொழில்நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தினரும், இந்திய வர்த்தக சம்மேளனத்தினரும் தூதுக் குழுவினரும் கலந்துகொண்ட கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்கான புதியயுகம் ஒன்றை சிறிலங்கா எதிர்நோக்கியுள்ளது என்று தெரிவித்தார். இக்கூட்டத்தில் உரையாற்றிய வர்த்தக கப்பல் துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் அண்மையில் இந்தியாவிடமிருந்து ஆயிரம் மெட்ரிக் தொன் சீனியை இலங்கை கொள்வனவு செய்தது முக்கிய திருப்புமுனை எனக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பேசிய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் ஜான் அமரதுங்க கூட்டு ஒத்துழைப்பு உடன்படிக்கை பற்றி குறிப்பிடுகையில், அதிகரித்த அளவில் வர்த்தக நடவடிக்கைகள் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் பற்றிக் குறிப்பிட்டார்.

இந்திய உயர் ஸ்தானிகர் என். என். ஜா. இக் கூட்டத்தில் பேசுகையில் பிராந்திய ஒத்துழைப்பு மூலம் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் மேலும் நெருக்கமடையும் எனக் குறிப்பிட்டார்.

## ராமச்சந்திரனுக்கு அ. தி. மு. கவில் இடம்

(சென்னை)

தமிழ்நாடு சட்டப் பேரவையில் முன்னாள் அமைச்சர் எஸ். ஆர். ராமச்சந்திரனுக்கு ஆளும் கட்சியில் இடமளிக்கப்பட்டது.

ராமச்சந்திரன் அனைத்து இந்திய அ. தி. மு கழகத்தை கேட்டதை அடுத்து இவ்வாறு அவருக்கு இடமளிக்கப்பட்டது எனப்பேரவை தலைவர்சேடப் பட்டிமுத்தையா பேரவையில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

# கட்டட வேலைகள் அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

(நல்லூர்)

கல்வித் திணைக்களம் செய்து வரும் கட்டட வேலைகள் தொடர்பான மாதாந்த அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு வட-கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சின் செயலாளர் பிரதேச கல்விப்பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

கல்வித் திணைக்களங்களிலும், கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் உள்ள கட்டட வேலைப்பகுதி வெளிக்கள ஊழியர்கள், நிர்வாக சேவையைச் சேர்ந்த ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து முந்த மாத வேலை பற்றிய மதிப்பீடு அறிக்கை கோரப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கைகளை தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு வட-கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சின் செயலாளர், அனைத்து மாகாணசபைக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

## மீண்டும் ஒருமுறை தாக்கப்பட்டால்

# ஒரு மாதத்திற்குள் இலங். விட்டு விலகுவோம்

(கொழும்பு)

மீண்டும் ஒருமுறை தாக்கப் பட்டால் ஒருமாத காலத்தினுள் படிப்படியாக வெளியேறுவோம் என்ற அடிப்படையில் பிரெஞ்சு மருத்துவக்குழு சேவையாற்ற உடன்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

பிரெஞ்சு நாட்டு மருத்துவக் குழுவுக்கு உதவிபுரியும் பல நாடுகள் தமிழ்ப் பகுதிகளில் இந்த மருத்துவ சேவை முற்று முழுதாக கைவிடப்படுவதை விரும்பவில்லை என்றும் அகதி முகாம்களிலும், வைத்திய சாலைகளிலும் ஏற்கனவே வைத்தியர் பற்றாக்குறை காணப்படுவதால் தமிழ் மக்கள் திடீர் வைத்திய சேவை இழப்புக்கு ஆளாக நேரிடும் என்றும் அவை உணர்ந்துள்ளன ஆகவே பிரெஞ்சு வைத்திய நிபுணர்களைத் திரும்ப அழைக்க தயக்கம் காட்டுகின்றன எனத் தெரிவித்தார்.

இதே வேளை மட்டக்களப்பு வைத்தியசாலையில் எம். எஸ் எவ் பிரெஞ்சு தொண்டர் நிறுவனத்தின் வைத்திய சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## தையல் கண்காட்சி

(பருத்தித்துறை)

யாழ். தொழில் திணைக்களம் வடமராட்சி கிழக்கின் நாகர் கோயிலில் நடாத்தி வரும் யுவதிகளுக்கான தையல் பயிற்சி நிலையத்தின் தையல் கண்காட்சியும், மலிவு விற்பனையும் வரும் 13 ஆம் திகதி தையல்பயிற்சி நிலையத்தில் யாழ் தொழில் திணைக்கள பருத்தித்துறை பகுதிதொழில் அதிகாரி திரு ஏ. பசுபதி தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்திலேயாழ். உதவித்தொழில் ஆணையாளர் திரு. கே சிவப்பிரகாசம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

இத்தையல் பயிற்சி நிலையத்தில் 25 யுவதிகள் ஒன்பது மாத தையல்பயிற்சியினை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர். இப்பயிற்சியாளர்களுக்கு தொழில் திணைக்களம் நாளொன்றுக்குதலா 15 ரூபாவை வழங்கி வந்தது இத்தையல் பயிற்சியினை மேற்கொண்ட யுவதிகளுக்கு தொழில் திணைக்களம் சான்றிதழ்களும் வழங்கும். (25)

## மருத்துவர் சுட்டுக் கொலை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர்தமிழ் மருத்துவர் ஒருவரைச் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து புத்தளம் பாதையூடாக கற்பிட்டியை வந்து சேர்ந்த ஜெயக்குமார் (வயது 35) என்ற மருத்துவரையே இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சைக்கிள் களவு

(அரியாலை

அரியாலையில் சைக்கிள்கள் களவாடப்படும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. சில நாட்களுக்கு முன் யோகநாதன். விவேகானந்தன் என்பவர்களது சைக்கிள்கள் அவர்களது வீட்டுப் போர்டிக்கோவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் களவாடப்பட்டுள்ளன. இன்னும் கனகரத்தினம் மகாவித்தியாலயத்துள் நிறுத்தப்பட்டிருந்த ஆசிரியர் மாணவர்களது சைக்கிள்கள் பலவும் காணாமல் போயுள்ளன. (11)

## 13 வயதில்

பயிலும் இவரே உலகிலேயே வயது குறைந்த பட்டதாரி மாணவன் என்று தெரிவிக்கப் படுகிறது.

உலகிலேயே மிகச் சிறிய வயதில் பட்டதாரியாகிய முதல் கணேஸ் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார் என கின்னஸ் புத்தக பிரதம ஆசிரியர் மாட்டின்டே தெரிவித்துள்ளார்.

## ஸ்லோவேனிய

சமாதானத்திட்டம் நிராகரிக்கப்பட்டால், யூகோஸ்லாவியா இராணுவத்துடன் மீண்டும் சண்டை போட வேண்டி இருக்கும் என்று ஸ்லோவேனியா குடியரசின் தலைவர்கள் எச்சரித்ததைத் தொடர்ந்து சமாதானத் திட்டம் ஏற்கப்பட்டதாக கூறப் படுகிறது

யூகோஸ்லாவியாவில் உள்ள ஐரோப்பிய சமூகத்தின் பார்வையாளர்கள் ஸ்லோவேனியா சென்று போர் நிறுத்தத்தை கண்காணிப்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யூகோஸ்லாவியாவில் இருந்து பிரிந்து சென்றுள்ள ஸ்லோவேனியா, குரோஷியா ஆகிய இரு குடியரசுகளும் தங்களது சுதந்திர பிரகடனத்தை அமுல்படுத்துவதை மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைத்து மற்ற நிபந்தனைகள் பற்றி பேச வேண்டும் என்று சமாதான திட்டம் கேட்டுக் கொள்கிறது.

# 446 வழிபாட்டுத்தலங்கள் வடக்கு கிழக்கில் சேதம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மட்டக்களப்பு, அம்பாறை திருகோணமலை, வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களில் மட்டும் அண்மைக் கால அசம்பாவிதங்களினால் நானூற்றி நாற்பத்தியாறு வழிபாட்டுத்தலங்கள் பாதிக்கப் பட்டுள்ளன. இதனால் ஏற்பட்ட சேதம் நான்குகோடியே தொண்ணூறு லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

# ஈராக்கிடம் 164 கிலோ பதனிட்ட யூரேனியம்

(நியூயோர்க்)

230 கிலோ யூரேனிய கனிப் பொருளும் 164 கிலோ கிராம் பதனிடப்பட்ட யூரேனியமும் இருப்பதாக ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையொன்றில் ஈராக் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் ஐ. நா சபைக்கான ஈராக்கிய தூதுவர் இந்த அறிக்கையை சமர்ப்பித்தார். இதில் தம்மிடம் 230 கிலோ யூரேனியம் இருப்பதாகவும் ஆனால் இவற்றில் பெரும்பாலானவை ஐ. நா. பாதுகாப்புச்சபை போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அழிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈராக்கின் அணுசக்தித் திட்டம் முற்றிலும் இராணுவ ரீதியற்றது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## சாரணர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்களும் திரிசாரணர்களும், சாரணத் தலைவர்களும், சாரண முக்கியஸ்தர்களும் நாளை வெள்ளிக்கிழமை (12-07 1991) காலை 10 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள "பாலம்" நிறுவனத்தில் கூடுமாறு வேண்டப் படுகின்றனர்.

## தம்பலகாமத்தில்

# நால்வர் கொலையைத் தொடர்ந்து பதற்றம்

(தம்பலகாமம்)

தம்பலகாமம் தெற்கில்மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதியான நாயன்மார் திடலில் அண்மையில் ஓர் இரவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சுடப்பட்டு இறந்ததைத் தொடர்ந்து மக்கள் பீதியில் ஆழ்ந்துள்ளனர்.

அங்கு வாழும் ஒரு சிலகுடும்பங்கள் பகலில் தங்கள் வீடுகளில் தங்கியிருந்து இரவில் அகதிமுகாம் போன்ற இடங்களில் சென்று தங்கி வருகின்றனர்.

# அபிவிருத்தி வேலைகளை நோராட் இடைநிறுத்தியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை தொடக்கம் பெரிய கல்லாறு வரையுமுள்ள பன்னிரண்டு வைத்திய சாலைகளில் 'நோராட்' உதவியுடன் பல மில்லியன்ரூபா செலவில் மேற்கொள்ளப்படவிருந்த அபிவிருத்தி வேலைகள், இடைநிறுத்தி வைக்கப்பட்டு ளதாக பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர் பி. அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா கிரிக்கெற் குழு மனேஜர் பண மோசடி

(கொழும்பு)

சிறிலங்கா கிரிக்கெற் விளையாட்டுத்துறையிலும் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை தலைதூக்கியுள்ளது

1990 இல் சிறிலங்கா கிரிக்கெற் அணி இந்தியாவுக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தது. இதன் மனேஜராகச் சென்ற காமினி குணசேகரா செலவுபோக ரூபா 82,000 கணக்கைத் தீர்க்கவில்லையாம்.

இதேபோல் ஜனவரி-மார்ச் வரை 1991 இல் நியூசிலாந்து சுற்றுப்பயணத்தைச் செய்த அணிக்கு ஸ்ரான்லி ஜெயசிங்கா மனேஜராகச் சென்றிருந்தார். இவரும் மிகுதிப் பணம் ரூபா 73,000 திருப்பிச் செலுத்தவில்லை.

சுற்றுப்பயணம் முடிந்து முப்பது நாட்களுக்கிடையில் மனேஜர் தனது கணக்கு விபரக்கணக்கை சிறிலங்கா கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையிடம் சமர்ப்பித்துக்கணக்கை முடிக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

காமினி குணசேகராவின் விவகாரம் கிரிக்கெற் கட்டுப் பாட்டுச் சபையின் ஒழுக்காற்றுச்சபைக்குப்பாரப்படுத்தப்பட்டுள்ளது இதேவேளை காமினி தன் பணத்தைச் செலுத்துவதாகக் கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபைக்குக் கடிதமூலம் தெரிவித்துள்ளாராம்.

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பண்ணிசைப் போட்டிகளில் முதலிடம் பெற்றோரும் தேசிய தனியார் பாடசாலைகளைச் சேர்ந்தோரும் பங்குபற்றும் பண்ணிசைப் போட்டி ஒன்று எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ச)

## கொழும்பில்...

பட்டு பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று காவல்துறை தெரிவித்தனர்.

காரைப் பறித்து ஓடிச் சென்ற கொள்ளையர். கார் சுவருடன் மோதியதும் அதைக் கைவிட்டு பஸ்ஸில் ஏறி ரூபா 200,000 பணத்துடன் தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளையர் வசம் ஆயுதங்கள் இருந்ததாகச் சாட்சியங்கள் எதுவுமில்லை என்று பொலிஸ் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.